[1994 நவம்பர் 9

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கேட்டிருக்கிற பஞ்சாயத்தில் ஏற்கெனவே ஒரு ஆரம்பப் பள்ளி சத்துணவு மையம் இயங்கி வருகிறது. அங்கே 118 மாணவர்கள் பயனடைகிறார்கள். ஜனத்தொகை 1175 ஆகும். அதுபோல குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியத்தில் கடலாங்குடி பஞ்சாயத்தில் ஒரு ஆரம்பப்பள்ளி சத்துணவு மையம் இயங்கி வருகிறது. அதில் 106 மாணவர்கள் பயனடைகிறார்கள். ஜனத்தொகை 1366 ஆகும். சற்குணேஸ்வரபுரம் பஞ்சாயத்தில் கரிவேலி என்னும் இடத்திலும் ஒரு குழந்தைகள் நல மையம் செயல்பட்டு வருகிறது. அதில் 42 குழந்தைகள், 2 வயது முதல் 4 வயது வரை உள்ளவர்கள் பயனடைகிறார்கள். கடலாங்குடிக்கும் கரிவேலிக்கும் இடைப்பட்ட தூரம் அரை கிலோமீட்டர். ஆகவே, கடலாங்குடி கீழத்தெருவில் 2 வயது முதல் 4 வயது வரை உள்ள குழந்தைகள் 46 பேர் உள்ளார்கள். ஆகவே, அடுத்த ஆண்டு இது ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 75, திருமதி அ.தி. சரஸ்வதி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

75—

சத்தியமங்கலம் தொகுதியில் வனவிலங்குகள் உறைவிடங்களில் குடிநீர்த் தொட்டிகள் அமைத்தல்.

***25273–திருமதி அ.தி. சரஸ்வதி :**

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்தியமங்கலம் தொகுதியில் வனவிலங்குகள் உறையும் பகுதிகளில் தண்ணீர் குடிக்க நீர்த்தேக்க தொட்டிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சத்தியமங்கலம் தொகுதியில் மட்டுமின்றி, வன உயிரினங்கள் காணப்படும் பகுதிகளில் தண்ணீர் குடிக்க நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1994 நவம்பர் 9]

திருமதி அ.தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகமே போற்றிப் புகழும் ஒப்பற்றத் தலைவியாகத் திகழும் அன்னை சந்தியா தந்த இந்தியத்தாய், சமூக நீதி காத்த வீராங்கனை, நான் கடவுளாக நித்தம் பூஜித்து வணங்கும் இதய தெய்வம், தமிழகத்தின் நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்காலத்தில் மழை மும்மாரி பொழிந்து, ஆறு, குளம், அணைகள் நிறைந்து வழிகின்றன. தமிழகம் வளமாகவும், செழிப்பாகவும், சிறப்பாகவும் திகழ்ந்து, மக்கள் மகிழ்ச்சியாக வாழ்கின்றார்கள். இந்தநன்னாளில் என் இதய தெய்வத்தின் பொற் பாதங்களில் என் நன்றியைக் காணிக்கையாக்கி, அமைச்சர் அவர்கள் நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்படும் என்று கூறினார்கள் ; அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 76, திரு. வி. கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. எச். எம். ராஜு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

76—

ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளை மெட்ரிக்குலேஷன் பள்ளிகளாக மாற்றியமைத்தல்

23327–திரு.* **வி. கே. லட்சுமணன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆங்கிலோ--இந்தியப் பள்ளிகளை மெட்ரிகுலேஷன் பள்ளிகளாக மாற்றியமைக்க தமிழக அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் சொல்லிவிட்டார். ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளை மெட்ரிகுலேஷன் பள்ளிகளாக மாற்றியமைத்தால் அவை நல்ல முறையில் செயல்படும் என்ற வகையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.கே. லட்சுமணன்